1990 சனவரி 25]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தெரிவித்த கருத்து மத்திய அரசுக்கு எடுத்துரைக்கப்பட்டு மாநில அரசின் சார்பில் நிச்சயமாக வலியுறுத்தப்படும்.

கடலூரில் சிறு துறைமுக அபிவிருத்தித் திட்டம்

*3524—திரு. இ. புகழேந்தி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலூரில் சிறு துறைமுக அபிவிருத்தித் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரில் அனல் மின் நிலையம் அமைப்பதற்கான நிலை இருப்பதாலும், கடலூர் சிப்காட் பகுதியில் சொன்னதை செய்யும் தமிழகத்தினுடைய தலைவர், எங்கள் அன்பு இனமானத் தலைவர் அவர்களுடைய பெருமுயற்சியின் காரணமாக பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ள நிலை உள்ளதாலும், பயணிகள் போக்குவரத்து (Ferry Service) கடலூர் துறைமுகப் பகுதிக்கு வர இருக்கின்ற சாத்தியக்கூறுகள் இருக்கின்ற காரணத்தாலும் தமிழக அரசு மத்திய அரசிடத்தில் வற்புறுத்தி கூடுதல் நிதியுதவி பெற்று விரைவாக இந்தத் துறைமுகப் பணிகளைத் தொடங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் துறைமுகத்தினுடைய முன்னேற்ற பணிகளுக்காக 7வது திட்டக் காலத்தில் 109.5 லட்சம் ரூபாய் செலவில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதிலே சில பணிகள் முடிவுற்று சமீபத்தில்தான் கலங்கரை விளக்கமும் கூட புதிய வடிவிலே அமைக்கப்பட்டு, கலங்கரை விளக்கமும் அங்கே திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. கடலூருடைய எதிர்கால நிலைமையைக் கருதி தொழிற்கூடமாக இருந்தாலும் எதிர்காலத்திலே அமைக்கப்பட இருக்கின்ற மின்சார வாரியத்தினுடைய அனல் மின் நிலைய திட்டமாக இருந்தாலும் அல்லது அரசு உத்தேசித்துள்ள படகு போக்குவரத்து (Ferry Service) சம்பந்தமான அப்படிப்பட்ட வசதிகளுக்கு ஏற்றாற்போல கடலூர் துறைமுகத்தினுடைய வளர்ச்சிக்கு

[1990 சனவரி 25

எதிர்காலத்திலே என்னென்ன பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது. வருகின்ற ஆண்டுகளில் அத்தகைய நல்ல திட்டங்கள் கடலூர் துறைமுகத்தினுடைய அபிவிருத்திக்காக நிறைவேற்றப்படும்.

ஊராட்சித் தலைவர்களுக்குப் பயிற்சியளித்தல்

*2367—திரு. ஏ. செங்குட்டுவன் ;

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சித் தலைவர்கள் நிர்வாக சம்மந்த விவரங்களை தெளிவாக தெரிந்துகொள்ளும் வகையில் ஒருவார காலத்திற்கு விளக்கப் பயிற்சியளிக்கும் புதிய திட்டத்தை அரசு கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17–4–1989-ல் வெளியிட்ட ஊரக வளர்ச்சித் துறை அரசு ஆணை எண். 241-ன்படி, ஊராட்சித் தலைவர்களுக்கு ஊராட்சி நிர்வாக நடைமுறையை விளக்கி 2 நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி மாநிலம் முழுவதும் 3–6–1989 முதல் 13–7–1989 வரை நடத்தி முடிக்கப்பட்டது.

9-30 மணி

திரு. ஏ. செங்குட்டுவன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி நிர்வாகம் சிறப்பாக நடைபெற, ஊராட்சி மற்றும் நகராட்சிகளினுடைய சட்ட திட்டப் புத்தகம், விதிமுறைப் புத்தகம், பல நகராட்சிகளில் இல்லை. தற்போது புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்களும் இல்லாத நிலையில் இருக்கிறது. அவற்றை அரசு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிட்டு ஊராட்சி மன்றத் தலைவர்களுக்குக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.கோ. சி. மணி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி நிர்வாக நடைமுறை விளக்கக் குறிப்புகள் புத்தக வடிவில் அச்சடிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டது. இதற்கு ஆங்கிலத்தில் தேவை இருந்தால் திரும்பவும் மொழிபெயர்த்துக் கொடுக்கலாம்.